## இராசிபுரம் நகராட்சி

### நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2024–ஆம் வருடம் டிசம்பர் மாதம் 30–ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் 23.12.2024

தலைவர்,
நகர் மன்றம்

### பொருள்கள்

(1) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி TN 28 AS 0110–இன் டிப்பர் பழுதை சரி செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 15000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3163/24/எச்1)**

**தீர்மானம் எண். 644**

அனுமதிக்கப்படுகிறது

(2) இராசிபுரம் நகராட்சிக்கு குப்பையில்லா நகரம் 5 நட்சத்திர தரச்சான்று மற்றும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா நகரம் தரச்சான்று ஆகியவை பெறுவதற்கு தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களால் விளம்பரம் செய்த வகையில் ரூ. 10248/– வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(2995/24/எச்1)**

**தீர்மானம் எண். 645**

அனுமதிக்கப்படுகிறது

(3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டிலுள்ள TN 28 AS 0104 மற்றும் TN 28 AS 0110 மினி டிப்பர் லாரிகளின் டயர்கள் (7.50, 16 = 12 எண்ணிக்கை) தேய்ந்தவற்றை புதியதாக MRF அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடம் வாங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(2996/24/எச்1)**

**தீர்மானம் எண். 646**

அனுமதிக்கப்பட்டது

(4) இந்நகராட்சி சாலை மற்றும் தெருப்பகுதிகளில் வளர்ந்துள்ள புற்களை அகற்ற இரண்டு புல் வெட்டும் இயந்திரங்கள் வாங்கவும் உத்தேச செலவினம் ரூ. 30000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(2993/24/எச்1)**

**தீர்மானம் எண். 647**

அனுமதிக்கப்பட்டது

(5) இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் ஒடிந்து விழும் மரக்கிளைகளை வெட்டி அகற்ற இரண்டு மரம் அறுக்கும் இயந்திரங்களை வாங்கவும் உத்தேச செலவினம் ரூ. 30000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(2992/24/எச்1)**

**தீர்மானம் எண். 648**

அனுமதிக்கப்பட்டது

(6) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டிலுள்ள TATA ACE வாகனம் TN 28 BW 9243-இன் டயர்கள் புதியதாக வாங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 25000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3006/24/எச்1)**

**தீர்மானம் எண். 649**

அனுமதிக்கப்பட்டது

(7) நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களது அலுவலக ஆணை ந.க.எண். 2211/2024/பி1 நாள் 02.07.2024—இல் இந்நகராட்சியில் இரண்டு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி வெங்கடாசலபதி நாடக சபா மூலம் நடத்த ஆணையிடப்பட்டுள்ளார்கள். எனவே, இதற்கான செலவினம் ரூ. 15000/— வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1922/24/எச்1)**

**தீர்மானம் எண். 650**

(8) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணியாற்றும் 64 தூய்மைப் பணியாளர்களுக்கு 2024—25—ஆம் ஆண்டிற்கு சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3054/24/எச்1)**

**தீர்மானம் எண். 651**

அனுமதிக்கப்பட்டது

**( 9 )** இந்நகராட்சியில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை பேலிங் செய்யும் இயந்திரத்தினை பழுதுநீக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) ஹரி கன்ஸ்ட்ரக்சன் – ரூ. **249758.80**
2) எம்.பி. காண்ட்ராக்டர் – ரூ. **255706.00**

**அலுவலகக்குறிப்பு :**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஹரி கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(2333/24/எச்1)**

**தீர்மானம் எண். 652**

ஏற்கப்பட்டது

**( 10 )** இந்நகராட்சியில் சேகரமாகும் மக்கும் கழிவுகளை துகளாக்கும் இயந்திரத்திற்கு புதிய பெல்ட் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) ஹரி கன்ஸ்ட்ரக்சன் – ரூ. **59649/–**
2) எம்.பி. காண்ட்ராக்டர் – ரூ. **62068/–**

**அலுவலகக்குறிப்பு :**

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஹரி கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(2374/24/எச்1)**

**தீர்மானம் எண். 653**

ஏற்கப்பட்டது

**( 11 )** இந்நகராட்சி தெருப்பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் பணிக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. **5.00** லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில் அரசு அனுமதி பெற்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3262/24/எச்1)**

**தீர்மானம் எண். 654**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு, தான் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகையினை ஒப்பந்ததாரர் திரு ஆர். பிரகாசம், மசக்காளிப்பட்டி என்பவர் திரும்ப வழங்கக் கோரியுள்ளார்.

| வ எண். | திட்டம் | பணியின் பெயர் | பக்கம் எண். | வரிசை எண். | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | TURIF 2017-18 | சி.பி. கண்ணையா தெரு, சுவாமி சிவானந்தா சாலை, புதுப்பாளையம் ரோடு, எல்லப்பா தெரு எண். 2 ஆகியப்பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல் பணி. | 43 | 41 | 200000 |
| 2 | TNUSDP 2021-22 Package No.3 | வள்ளலார் சாலை, சுப்பிரமணியம் நகர், கேசவன் லே அவுட், வைத்தியலிங்கம் தெரு, இராமசாமி தெரு எண். 1, 2, 3, 4–இல் தார் சாலை அமைத்தல் மற்றும் அமைச்சர் கோவிந்தசாமி தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 6 | 46 | 200000 |
| 3 | TNUSDP 2021-22 Package No.4 | ஹவுசிங் போர்டு, நெசவாளர் காலனி, எல்லப்பா காலனி, கோனேரிப்பட்டி நெ. 2, மேட்டுக்காடு ரோடு, காமராஜர் காலனியில் தார் சாலை அமைத்தல், கோனேரிப்பட்டி எக்ஸ்டென்ஷன் நெ. 1–இல் கான்கிரீட் சாலை அமைத்தல். | 6 | 47 | 200000 |
| 4 | TNUSDP 2021-22 Package No.5 | மாரப்பன் தோட்டம், இபி ஆபிஸ், வி.நகர் ரோடு எண். 2, 3, 9, 10 தார்சாலை அமைத்தல் மற்றும் சுப்பராய தெரு, நஞ்சப்பா தெரு, அங்காளம்மன் கோவில் மற்றும் செக்கடி தெரு கான்கிரீட் அமைத்தல். | 6 | 48 | 200000 |
| 5 | TNUSDP 2021-22 Package No.6 | தட்டான்குட்டை ரோடு – காமராஜர் நகர் வார்டு எண். 8 காட்டூர் அங்காளம்மன் கோவில் ரோடில் தார்சாலை அமைத்தல் மற்றும் மல்லித் தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 6 | 49 | 200000 |
| | | **மொத்தம்** | | | **1000000** |

மேற்காணும் வைப்புத் தொகை வரிசை எண். 1 முதல் 5 வரை (2017–18 மற்றும் 2021–22) பணிகள் மேற்காள்ளப்பட்டுள்ளதால், காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கிலிருந்து மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2582/2024/பி2)

**தீர்மானம் எண். 655**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 13 வரையுள்ள வார்டுகளிலுள்ள ஆழ்துளை மின்மோட்டார்கள் மற்றும் திறந்தவெளிக்கிணறுகளின் மின்மோட்டார்களை பழுது நீக்கம்

செய்தல்  மற்றும் பராமரிப்பு செய்தல் (2467/2024/இ2) பணிக்கு நகர் மன்ற தீர்மான எண். 622 நாள் 23.10.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.11.2024-இல் ஒப்பந்தப்புள்ளி  கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு R.S.இரங்கசாமி ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.26% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 5.29% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.26% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு R.S. இரங்கசாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2467/24/இ2)

**தீர்மானம் எண். 656**

அங்கீகரிக்கப்பட்டது

(14) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 7 வி.நகர் ரோடு எண். 1, 6–ஆவது கிராஸ் அருணாச்சலம் காடு பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணற்றில் சிறு மின் விசை பம்பு பொருத்தி சின்டெங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்தல் (2709/2024/இ2) பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 628 நாள் 23.10.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 3,80,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.11.2024-இல் ஒப்பந்தப்புள்ளி  கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/S ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு T. முருகன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 1.11% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.02% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம். (2709/24/இ2)

**தீர்மானம் எண். 657**

அங்கீகரிக்கப்பட்டது

(15) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள வார்டுகளிலுள்ள குடிநீர் குழாய் உடைப்புகளின் பழுதுகளை நீக்கம் செய்தல் (2065/2024/இ2) ) பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 617 நாள் 23.10.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.11.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | JP Construction, இராசிபுரம் | -0.35% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | P&B Enterprises, இராசிபுரம் | 1.63% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.35% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள JP Construction, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2065/24/இ2)

**தீர்மானம் எண். 658**

அங்கீகரிக்கப்பட்டது

(16) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 1, 7, 11, 19, 22, 27 ஆகிய வார்டுகளில் உப்பு நீர் பைப் லைன் நீட்டிப்பு செய்தல் (2066/2024/இ2) பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 618 நாள் 23.10.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 3,75,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.11.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திருமதி R. ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.81% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு N. செல்லப்பன், இராசிபுரம் | -0.22% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.22% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N. செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2066/24/இ2)

**தீர்மானம் எண். 659**

அங்கீகரிக்கப்பட்டது

(17) இராசிபுரம் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட தினசரி அங்காடியிலுள்ள 57 கடைகளுக்கு புதிய மின் இணைப்பு பெற கடைகளிலிருந்து மின்வாரிய கம்பத்திற்கு கேபிள் போடுதல் மற்றும் பேனல் போர்டுகளை ஒரே இடத்தில் பொருத்துதல் (0908/2024/இ2) பணிக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 629 நாள் 23.10.2024-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 4,90,000/- என்ற மதிப்பீட்டிற்கு 27.11.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ் | -0.44% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | யாஷ் வைஷ் எலக்ட்ரிக்கல்ஸ் | 5.02% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.44% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம். (908/24/இ2)

**தீர்மானம் எண். 660**

அங்கீகரிக்கப்பட்டது

( 18 ) இராசிபுரம் நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் பழுதடைந்த கட்டிடங்களை இடித்து புதியதாக வணிக வளாகம் மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுவதற்கு தற்காலிகமாக மின் இணைப்பு பெறுவதற்கு மின் கட்டணம் ரூ. 2413/– பணியின் அவசரம் கருதி செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.
ஆ) மேற்காணும் செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மன்றம் பதிவு செய்யலாம்.

**(2404/24/இ2)**

**தீர்மானம் எண். 661**

பதிவு செய்யப்பட்டது

( 19 ) இராசிபுரம் நகராட்சிக்கு விஸ்தரிக்கப்பட்ட ஏரியாக்களில் புதிய தெருவிளக்கு அமைக்க மின்வாரியத்திற்கு 17 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டது. அதற்குரிய மதிப்பீட்டு கட்டணம் ரூ. 60510/– பணியின் அவசரம் கருதி செலவிடப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.
ஆ) மேற்காணும் செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மன்றம் பதிவு செய்யலாம்.

**(3147/24/இ2)**

**தீர்மானம் எண். 662**

பதிவு செய்யப்பட்டது

( 20 ) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் வாகனம் எண். TN 28 BZ 9021(6000 லிட்டர்) மற்றும் TN 28 BZ 8975 (12000 லிட்டர்) வாகன காப்பீடு முடிவடைந்ததால் அதனை புதுப்பிக்க United India Insurance Co. Ltd நிறுவனத்தில் புதுப்பிக்க TN 28 BZ 9021(6000 லிட்டர்) வாகனத்திற்கு ரூ. 31887/– மற்றும் TN 28 BZ 8975(12000 லிட்டர்) வாகனத்திற்கு ரூ. 42120/– செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.
ஆ) மேற்காணும் செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மன்றம் பதிவு செய்யலாம்.

**(2413/24/இ2)**

**தீர்மானம் எண். 663**

பதிவு செய்யப்பட்டது

( 21 ) இராசிபுரம் நகராட்சியில் நடைபெறும் திட்டப் பணிகளின் விவரங்களை பொதுமக்கள் அறியும் பொருட்டு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு கட்டணங்கள் பின்வருமாறு.

| வ.எண் | விளம்பரத்தின் பெயர் | நாளிதழின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரம் | தினத்தந்தி | 25987.50 |
| 2. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | மாலை தமிழகம் | 23,100.00 |
| 3. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | தினகரன் | 22,680.00 |
| 4. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | தமிழ்முரசு தொழில் மலர் | 9975.00 |
| 5. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | தினத்தந்தி | 21420.00 |
| 6. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | மாலைமலர் | 9900.00 |
| 7. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசின் மூன்றாண்டு சாதனைகளின் விவரம் | தினமலர் | 14700.00 |
| 8. | ஆயுத பூஜை சரஸ்வதி பூஜை வாழ்த்து | தினகரன் | 18900.00 |
| 9. | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரம் | தி இந்து | 27300.00 |
| 10. | இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரம் | தினமணி | 22260.00 |
| | | மொத்தம் | 196222.00 |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2413/24/இ2)

**தீர்மானம் எண். 664**

அங்கீகரிக்கப்பட்டது

(22) இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அணைப்பாளையத்தில் அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் வரைபட அனுமதி பெற தனியார் பொறியாளர் மூலம் இணையத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் அணைப்பாளையம் கிராமம் – சர்வே எண். 41/1B2, 117/1A2, 115/4B, 115/5, 116/1, 116/3, 116/4, 116/5B1, 118/5B,116/2 மற்றும் 41/1F2 இந்த புல எண்களில் உள்ள நிலத்திற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்று பெறுதல் தொடர்பான பணி மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மேற்காணும் செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1890/2024/இ1)

**தீர்மானம் எண். 665**

அனுமதிக்கப்பட்டது

**( 23 )** இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் வருமான வரி பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்தி சரிபார்க்கும் பணிக்கு **2023–2024** மற்றும் **2024–25**–ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**50000/–** மற்றும் **2023–24**–ஆம் ஆண்டில் Q1, Q2, Q3, Q4 கணக்கில் சரிபார்க்கப்பட்டதற்கு Tmt R. Pushpavalli, BKPV e-TDS Works மேற்கொள்ளப்பட்டமைக்கு மேற்படியாருக்கு செலவினத் தொகை ரூ. **5380/–** வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவினத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4099/21/இ1)

**தீர்மானம் எண். 666**

அனுமதிக்கப்பட்டது

**( 24 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, 12 மற்றும் 27 பகுதிகளில் உப்புநீர் குழாய் இணைப்பு நீட்டிப்பு செய்துதர வார்டு எண். 4 மற்றும் 12 –ஆவது நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் வார்டு எண். 27–இல் உள்ள பொதுமக்கள் கடிதம் வழங்கியுள்ளனர். அதற்கிணங்க, இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் 15 நாட்களுக்கு ஒருமுறை பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே தினசரி பொது மக்களுக்கு தண்ணீர் வழங்க இப்பணியை மேற்கொள்ளுவது அவசியமாகிறது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.55 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3377/24/இ2)

**தீர்மானம் எண். 667**

அனுமதிக்கப்பட்டது

**( 25)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 08, 13, 14, 16, 22, 23, 24 மற்றும் 27 பகுதிகளுக்கு திரு.வி.க. பூங்காவிலுள்ள கிணற்றில் தினசரி 25000 லிட்டர் கொள்ளளவு தண்ணீர் மோட்டர் மூலம் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. தற்போது கிணற்றில் உள்ளே மரம், செடி, கொடிகள் அதிகமாக வளர்த்துள்ளது. இதனால் தண்ணீர் அசுத்தம் ஆகிறது. மேலும் இப்பகுதி பொது மக்கள் மற்றும் மாணவர்கள் பூங்காவினை அதிகம்

பயன்படுத்தி வருகிறார்கள். அருகிலுள்ள இக்கிணற்றின் கம்பி வேலியினை அதிகம் சேதப்படுத்தி கிணற்றின் உள்ளே இறங்கி மீன் பிடித்து நீரினை அசுத்தம் செய்து வருகின்றனர். எனவே மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் முன்புறமுள்ள கம்பி வேலியினை உறுதியாக அமைப்பதற்கும், உள்ளே இருக்கும் மோட்டரினை பழுது நீக்க புதிய உருளை அமைப்பதற்கும், மரம், செடி, கொடிகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 1.20 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவினத் தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3376/24/இ2)

**தீர்மானம் எண். 668**

அனுமதிக்கப்பட்டது

**( 26 )** இராசிபுரம் நகராட்சியில் தற்பொழுதுள்ள தெரு விளக்குகள் அனைத்தும் SUIDF திட்டத்தின்கீழ் LED விளக்குகளாக மாற்றம் செய்து அதனை தனியார் நிறுவனம் மூலம் (Out Sourcing) 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி கட்டிடங்கள், பொது கழிப்பறைகள், பேருந்து நிலையம், பூங்காக்கள், நகராட்சி பள்ளிக்கட்டிடங்கள், அம்மா உணவகம், பொது சுகாதார பிரிவு கட்டிடங்கள், குடிநீர் தொட்டிகள் ஆகியவற்றில் உள்ள 596 விளக்குகள் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக பழுது ஏற்பட்டு மாற்றப்படாமல் உள்ளது. இதனால் பொது மக்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே தற்போது முதற்கட்டமாக 200 எண்ணிக்கை 18 வாட்ஸ் LED விளக்குகள் 2024-25 ஆண்டுக்கான பொதுப்பணித்துறை விலைவிகிதப்படி வாங்கி பொருத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட செலவினத்தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3375/2024/இ2)

**தீர்மானம் எண். 669**

அனுமதிக்கப்பட்டது

**( 27 )** இந்நகராட்சியில் தினசரி மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண். 11 மற்றும் 12–ஐ திருமதி ஸ்ரீசாய்சரண்யா என்பவர் ஏலம் எடுத்து நடத்தி வந்தார். தற்பொழுது கடையை நடத்த முடியாத காரணத்தால் கடையை நகராட்சி வசம் ஒப்படைக்க 19.11.2024–ஆம் தேதி

கடிதம் கொடுத்துள்ளார். மேலும் கடையின் வாடகைத் தொகை மற்றும் GST தொகையை அன்னாரின் வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்து மீதி தொகையினை வழங்குமாறு தெரிவித்துள்ளதால் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடை எண். 11 மற்றும் 12—ஐ உடனடியாக மறு ஏலத்திற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/22/அ2)

**தீர்மானம் எண். 670**

அனுமதிக்கப்பட்டது

**( 28 )** இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ச.வார்டு – A, பிளாக்– 2, நகர புல எண்.6/4 B–இல் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மனுதாரர் திருமதி பா. விஜயலட்சுமி க/பெ. பார்த்தசாரதி, கதவு எண். 19, கல்யாண சுந்தரம் தெரு, மோளகவுண்டம்பாளையம், ஈரோடு என்பவருக்கு 1.06 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 18 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT APPROVAL NO. 271/2024, நாள் 29.10.2024–இல் ROC.NO.AY607LER/2024/TCP/2024/TCP-Dated 10.10.2024-இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பொறியியல் பிரிவின் 11.12.2024–ஆம் தேதிய குறிப்பில் மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலை, சாலையின் இருபுறமும் சிமெண்ட் கான்கிரீட் மழைநீர் வடிகால் வசதி, சாலையின் இருபுறமும் குடிநீர் பகிர்மான குழாய், சாலையின் இருபுறமும் சோலார் மின் விளக்குகள் 9 எண்ணிக்கை ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். மேலும் பொறியியல் பிரிவின் 12.12.2024–ஆம் தேதிய குறிப்பின்படி இப்பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க வழிவகை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள். மேலும் பொறியியல் பிரிவு குறிப்பின்படி மூன்றாம் தரப்பில் பணிகளை ஆய்வு செய்து சான்று வழங்க முதல்வர், ஞானமணி தொழில்நுட்ப கல்லூரி, நாமக்கல் அவர்களை கோரப்பட்டதின் அடிப்படையில், மேற்கண்ட கல்லூரியின் நேராய்வின்படி, மேற்கண்ட மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் தார் சாலை, சாலையின் இருபுறமும் சிமெண்ட் கான்கிரீட் மழைநீர் வடிகால் வசதி, சிறுபாலம், சாலையின் இருபுறமும் சோலார் தெரு விளக்குகள் வசதி, குடிநீர் பகிர்மான குழாய் ஆகிய அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக சரிபார்த்து தங்களது ந.க.எண். 66/2024/GCT, நாள் 20.12.2024 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க உரிய கட்டணம் மொத்தம் ரூ. 47,510/—ஐ மனுதாரர் இந்நகராட்சியில் ரூ. 46,510/—ஐ சலான் எண். 053/01/2/24–25/0012408 மற்றும் ரூ. 1000/—ம் சலான் எண். 053/01/2/24–25/0012409, நாள் 23.12.2024–இல் செலுத்தி ரசீது சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு மற்றும் மனைப்பிரிவு சாலை ஆகியவற்றினை தானபத்திர ஆவண எண். 6645/2024, நாள் 22.10.2024–இன்படி சாலைகளின் பரப்பளவு 866.25 சதுர மீட்டர் இடமும் மற்றும் பொது உபயோகத்திற்காக 23.24 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்ப்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை விதிமுறைகளுக்குட்பட்டு இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(2987/24/எப்1)**

**தீர்மானம் எண். 671**

ஒப்புதல் வழங்கப்பட்டது

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி